# CHOOSEN

## LEADERSHIP LESSONS FROM JESUS

## LESSON ONE

## WHY?

A. ஏன் நீங்கள்/நாம் தலைமைத்துவத்தை இன்றைய காலகட்டத்தில் கற்றுக்கொள்ள வேண்டும்?

   a. வெற்றிக்காரணமான மற்றும் சந்தோஷமான வாழ்க்கைக்காக!

      i. இது தான் முக்கியமான காரணமாக இருக்கமுடியும்.

      ii. நாம் இந்த இரண்டு விஷயத்திற்காக தான் கடினமான வாழக்கையை வாழுகிறோம்.

      iii. குடும்பத்திலும், சமுதாயத்திலும், படிக்கிற இடத்திலும், வேலைசெய்கிற இடத்திலும், முக்கியமாக சபையிலும் இந்த இரண்டு காரியங்கள் தேவைப்படுகிறது.

   b. பொறுப்புடையவர்களாய் இருப்பதால் நாம் தலைமைத்துவத்தை கற்றுக்கொள்ள வேண்டும்.

      i. குடும்பத்திலும், சமுதாயத்திலும் வேலை செய்கிற இடத்திலும் மற்றும் சபையிலும்

      ii. சரியான தலைமைத்துவத்தை கற்றுக்கொள்ளாதது தான்! நம்முடைய வாழ்க்கையில் சந்தோஷத்தை தவறான முறையில் தேடுவதற்கு காரணமாய் இருக்கிறது.

      iii. வாலிபர்கள் சந்தோஷத்தை எப்படி தேடுகிறார்கள்? வாலிபர்கள் யாரை தங்களுடைய முன்மாதிரியாக எடுத்துக்கொள்கிறார்கள்?

         1. போதைப்பொருள்களிலும்
         2. ஆபாசமான காரியங்களை பார்ப்பதிலும், கேட்பதிலும் மற்றும் சிந்திப்பதிலும்
         3. அர்த்தமே இல்லாத காரியங்களிலும்.
         4. இன்னும் பல காரியங்களிலும்.....

      iv. பெற்றோர்களுக்கு பிள்ளைகளை எப்படி வழிநடத்துவது என தெரியவில்லை.

      v. ஒரு நிருவனத்தில் இருக்கிறவர்களுக்கும், வேலை செய்கிற இடத்தில் குழுவாக இணைந்து வேலை செய்வதற்கும் இலக்கை அடைய இந்த தலைமைத்துவத்தை கற்றுக்கொள்ள வேண்டும்.

      vi. மிக முக்கியமாக குடும்பத்திலும், சபையிலும் வெற்றிக்க்காரணமாக இருக்க இந்த பாடங்களை கற்றுக்கொள்ள வேண்டும். சபையில் இருக்கும் போதகருக்கும், மூப்பருகளுக்கும் நோக்கம் என்ன? (கொலோ 1:28)

c. தலைமைத்துவத்தை கற்றுக்கொள்வதும், அதை வாழ்க்கையில் பயன்படுத்துவதும், நம்மை நல்ல மனிதர்களாயும், எல்லாரும் விரும்பும் மற்றும் பின்பற்றும் நபர்களாய் மாற்றும்.
   i. நாம் தேறினவர்களாய் இருப்போம். (கொலோ 1:28)
      1. தேறினவர்கள் “Vine dic” – signifies “having reached its end” finished complete, perfect, fully grown, mature)
      2. பார்க்கவும் 1 கொரி 14:20; எபே 4:15; பிலி 3:15
      3. மத்தேயு 5:48 – இந்த வசனத்தை உங்களால் புரிந்துக்கொள்ள முடிகிறதா?
         a. தேவனுடைய பிள்ளைகளிடம் எதிர்பார்க்கப்படுவது என்ன? என்ன கட்டைளையிடுகிறார்? **“பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்”**
      4. தேவனுடைய வார்த்தை நாம் தேறினவர்களாய் இருக்கும் படி கொடுக்கப்பட்டிருக்கிறது. ( 2 தீமோ 3:16)
      5. நாம் தேவனுடைய வார்த்தையின் படி நடப்பதால், அது நம்மை மறுரூபமாக்கும். (ரோமல் 12:2).

**B.** ஏன் தலைமைத்துவத்தை இயேசுவிடம் இருந்து கற்றுக்கொள்ள வேண்டும்?
   **a.** ஏனென்றால்....
      **i.** அவர் தான் மாதிரி (ரோமர் 8:29; 1 யோவான் 2:6)
         1. இயேசு கிறிஸ்து ஒரு மனிதனாய் சரியான வாழ்க்கை எப்படி வாழ வேண்டும் என்பதை நமக்கு காண்பித்திருக்கிறார்.
         2. ஒரு கிறிஸ்தவர், இந்த பூமியில் இயேசு கிறிஸ்துவைப்போல வாழ வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது (எபே 4:11)
      **ii.** இயேசு கிறிஸ்துவைப்போல நம்முடைய வாழ்க்கையில் வாழும்போது, நாம் சந்தோஷமான, வெற்றிக்காரனமான வாழ்க்கையை வாழ முடியும். (யோவான் 1:9; யோவான் 8:12). நித்திய ஜீவனைப்பெற்றுக்கொள்ள முடியும்.
      **iii.** பார்க்கவும் மத் 11: 28,29

நமக்கான பாடம் என்ன?

1. நாம் பொறுப்புடையவர்களாய் இருப்பதால் நாம் தலைமைத்துவத்தை கற்றுக்கொள்ள வேண்டும்.
2. நாம் தலைமைத்துவத்தை இயேசுவிடம் இருந்து நாம் கற்றுக்கொள்ளும் போது, நாம் தேறின மனிதர்களாய் இந்த பூமியில் மற்றவர்களால் நேசிக்கப்படுகிறவர்களாய் இருப்போம்.
3. இந்த பாடங்களில் இருந்து நீங்களும், நானும் இயேசுவிடமிருந்து தலைமைத்துவப்பாடங்களை கற்றுக்கொண்டு சந்தோஷமான வாழ்க்கையை வாழுவோம்!

# CHOOSEN

## LEADERSHIP LESSONS FROM JESUS

## LESSON TWO

## WHAT?

A. தலைவன் மற்றும் தலைமைத்துவம் என்பது என்ன?

a. “தலைவன்” - leader = Lead+Der

i. வழி நடத்துபவனே\காண்பிப்பவனே தலைவனாக இருக்கிறான்.

1. மற்ற மக்களுக்கு மாதிரியாக இருந்து, அவர்களை பின்பற்றும் படி அவர்களுக்குள் தாக்கத்தை ஏற்ப்படுத்துகிறவன் தலைவனாக இருக்கிறான்.

a. இயேசு கிறிஸ்து (மத் 5:19,20 ,25; மாற் 1:16-20; யோவா12:19)

b. அப்போஸ்தலர்கள் (பிலி 3:17; 2 தெச 3:7-10)

c. மூப்பர்கள் (1 பேது 5:2-4)

d. கிறிஸ்தவர்கள் ( 1தீமோ 4:12;பிலி 2:14)

i. In the definition as Christians we are all: 1) To guide others by our influence; 2) We are in charge of our demeanor toward others; 4) We have influence.

2. Leadership is not about being in charge leadership is about taking care of those in your charge

3. Leader is no title, it is action.

B. There are leadership qualities that we all need to possess as Christians. With influence we can be leading in an INDIRECT way. You may not be giving orders or in charge of someone else (and not qualified), but people are watching and learning from you. The decisions you make and the actions you take can influence others.

C. Consider this quote: “*Leadership happens any time we influence the thinking, behavior or development of another person*.”[1] In that sense we are ALL leaders.

i. வழி நடத்துதலை, அவர் எப்படி செய்கிறார், என்பதே தலைமைத்துவமாக இருக்கிறது.

C. **தலைவர்கள் என்பவர் அவசியமானவர்கள்.**

**a.** இவர்களே, இவர்கள் வழிநடத்தும், குழுவின் வெற்றியையும், தோல்வியை தீர்மானிக்கும் நபர்களாய் இருக்கின்றனர்.

**b.** தேவன் சபையை வழிநடத்துவதற்கு, மூப்பர்களை நியமித்திருக்கிறார்.(அப் 20:28)

i. புதிய ஏற்பாட்டில் சபையில், மூப்பர்கள் அவசியமாய் இருந்தார்கள், அவர்கள் அந்த சபையின் மீது பொறுப்பாளிகளாய் இருந்தார்கள்\இருக்கிறார்கள். (அப் 15:22)
ii. **1 பேதுரு 5:1-3**
iii. ஏன் சபையில் மூப்பர்கள் உருவாகுவதில்லை? ஏற்ப்படுத்தப்படவில்லை?
iv. சபையின் வளர்ச்சிக்கு, இவர்கள் முக்கியமான பங்கு வகிக்கிறார்கள்.
v. தீத்து 1:5

c. குடும்பத்திலும், சமுதாயத்திலும் மற்றும் வேலை செய்கிற இடத்திலும் தலைமைத்துவம் என்பது அவசியமானது.

D. தலைவர்கள்\தலைமைத்துவம் என்பது எது இல்லை?

a. தலைவர்கள் என்பவர்களை குறித்து தவறான புரிதல்கள் எல்லா இடத்திலும் இருக்கின்றன.

b. தலைவர்கள் என்றால், அவர்கள் ஆளாக்கூடியவர்கள் என்றும், எல்லா அதிகாரமுடையவர்கள் என்றும் நினைக்கின்றனர்
i. தலைவர்கள் என்பவர்கள் BOSS இல்லை, அவர்கள் வழி நடத்துபவர்களாய் மாத்திரமே இருக்கின்றன.
ii. இவர்கள் ஊழியம் செய்பவர்களாய் இருக்கின்றனர். (மத் 20:26-28)
iii. சபையில் மூப்பர்கள் கூட, சபையை சுயத்தினால் வழி நடந்தாமல், இயேசுவின் கட்டளைகளின் படி தான் வழி நடத்த வேண்டும். (1 பேது 5:3)
iv. இயேசு கிறிஸ்துவே சபைக்கு தலையானவர், எல்லா அதிகாரமும், எல்லா வல்லமையும் இயேசு கிறிஸ்துவுக்கே இருக்கின்றன. நாம் அவருக்கு பணிவிடைக்காரர்களாய் இருக்கின்றோம். (கொலோ 1:18)

c. தலைவர்கள் என்பவர்கள் எல்லாருக்குள்ளும் இருக்கின்றன.
i. தலைமைத்துவ பண்பு என்பது, இயற்கையாக தான் வர வேண்டும் என மக்கள், நினைக்கின்றன. ஆனால் தலைமைத்துவம் என்பது கற்றுக்கொள்ள கூடியதாகவும் அதை வளர்ந்தேடுக்க கூடியதாகவும் இருக்கின்றது.
1. பானபாத்திரனாய் இருந்த நெகேமியா ஒரு நல்ல தலைவனாய் இருந்தான்.(நெகேமியா 2:17)
2. மீன் பிடித்திருந்த பேதுரு மற்றும் யோவானும் சபையின் மூப்பர்களாய் மாறினார்கள். (1 பேது 5:1; 3 யோவான் 1)

d. தலைவர்கள் என்பவர்கள் எல்லாம் தெரிந்திருக்க வேண்டும் என தவறான புரிதல்.
i. இயேசு கிறிஸ்து இந்த பூமியில் இருக்கும் போது கற்றுக்கொள்ள கூடியவராய் இருந்தார். (எபி 5:8)
ii. தலைவன் என்றால் எல்லாம் தெரிந்திருக்க வேண்டும் என அர்த்தமில்லை.
iii. அவர் தெரியாதை கேட்டு கற்றுக்கொள்ள கூடியவராய் இருப்பார்.
iv. தவறு செய்யும் போது, அதிலிருந்து கற்றுக்கொண்டு, அதை சரி செய்பவராய் இருப்பார்.

e. தலைவர்கள் என்பது பட்டமில்லை, அது மற்றவர்களுக்கு மாதிரியாக இருப்பதில் இருக்கிறது.

    i. தலைவர்கள் என்பது பதவி என மக்கள் நினைக்கின்றனர், ஆனால் அது அப்படியில்லை.

E. **நமக்கான பாடம்?**

  a. வாழ்க்கையில் ஏதாவது கட்டத்தில் நாம் தலைவர்களை செயல்ப்படுவதற்கான சூழ்நிலைகள் வரும்

    i. கணவனாக
    ii. மனைவியாக
    iii. வாலிபர்களை வழிநடத்துபவராக
    iv. மூப்பர்களாக
    v. வேலை செய்யும் இடத்தில் கூட

  b. நம்முடைய வாழ்க்கையில் தலைவர்களாய் செயல்ப்படுவது அவசியம், இந்த தலைவராய் இருப்பது என்பதை உலகத்திலே சிறந்த தலைவராய் இருந்த இயேசு கிறிஸ்துவிடம் இருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

  c. நீங்கள் நல்லது செய்கிறீர்களோ அல்லது கெட்டது செய்கிறீர்களோ, ஆனால் யாரோ ஒருவர் உங்களை பார்த்துக்கொண்டு இருக்கிறார், உங்கள் செயல்களினால் கவர்த்து அவர் நீங்கள் செய்வதைப்போல செய்கிறார்.

  d. உங்களுடைய நல்ல மாதிரியினால் உங்களால், நல்ல தலைவராய் இருக்க முடியும்.

# CHOOSEN

## LEADERSHIP LESSONS FROM JESUS

## LESSON THREE

## INFLUVENCING

வசன பகுதி: மத் 13:31,32; லூக் 13:18,19

அ. ஒரு சாதாரண மனிதன் எப்பொழுது தலைவனாக மாறுகிறான்?

A. இயேசு கிறிஸ்து எப்பொழுது தலைவராக மாறினார்?
    a. பின்பற்றுபவர்கள் இருக்கும் போதே ஒருவர் தலைவராய் இருக்க முடியும்.
    b. இயேசு கிறிஸ்துவை அநேக ஜனங்கள் பின்பற்றினார்கள். (மத் 4:18-20; மத் 4:25; மத் 8:1; மத் 9:9; மத் 12:15)
        i. இயேசு கிறிஸ்துவை பின்பற்றுவதினால், அதிகாரத்தில் இருக்கும் மனிதர்களால் தங்களுக்கு பிரட்சனை வரும் என தெரிந்தும், வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் அவரைப் பின்பற்றினார்கள். (யோவா 12:42,43; 9:22; 3:2)
            1. இதற்கு இயேசு என்ன செய்தார்?
                a. அவர்களை கட்டயப்படுத்தவோ? கெச்சவோ இல்லை? அவர் எந்த ஒரு தந்திரத்தையும் செய்யவில்லை! அவர் தன்னைதானே விற்பனை செய்து கொள்ளவில்லை.
                b. அவர்களின் விருப்பத்தை ஏற்ப்படுத்தினார்.(மத் 8:19)
                c. நம்பிக்கை உருவாக்கினார். (யோவா 9:31-33; லூக் 24;19)
        ii. இயேசு கிறிஸ்து ஜனங்களுக்கு வெளிச்சத்தை கொடுக்கிறவராய் இருந்தார். (யோவா 8:12)

B. இயேசு கிறிஸ்துவின் வார்த்தையும் செயலும். (லூக் 24:19; அப் 1:2)
    a. இயேசுவின் போதனைகளும், அவரின் செயல்களும் ஜனங்களுக்குள் நம்பிக்கை ஏற்ப்படுத்தி அவரை பின்பற்றும் படியான தாக்கத்தை ஏற்ப்படுத்தியது.
    b. இயேசு கிறிஸ்து தனக்கு இருக்கும் வல்லமையை பயன்படுத்தி, ஜனங்களுக்கு நன்மை செய்தார். ( மத் 4:23; அப் 10:38)
        i. அவர் சுயநலமுடையவராய் இல்லை!
        ii. கிறிஸ்தவர்கள் நன்மை செய்ய வேண்டும் என தேவன் எதிர்பார்க்கிறார் (கலா 6:9,10; எபி 13:16; தீத் 3:14)

iii. நாம் நன்மை செய்யும் போது, அதற்கான பலனை பெற்றுக்கொள்கிறோம்.

1. தனக்காக நேரத்தையும், தனக்காக கரிசனையும் காண்பிப்பவர்களை ஜனங்கள் விரும்புகின்றனர்.

c. இயேசுவின் போதனைகள் ஜனங்களின் இருதயத்தை தொட கூடியதாக இருந்தது. (மத் 7:28,29)

i. இயேசுவின் வார்த்தைகள் எளிமையானதாகவும், கவலையில் இருக்கிறவர்களுக்கு ஆறுதலை தர கூடியதாகவும், தவறை உணர்த்தி புரியவைக்க கூடியதாகவும் இருந்தது. (மாற் 12:37).

1. இயேசு கிறிஸ்து எந்த இடத்திலும் தன்னை தானே பெருமையாய், பேசி மற்றவர்களை தாழ்வாக பேச வில்லை.

a. இப்படிப்பட்டவர்களை ஜனங்கள் வெறுக்க கூடியவர்களாய் இருக்கிறார்கள்.

2. சத்தியத்தை பேசினார். (லூக் 20:21)

a. உதாரனம்: யோவான் 4:1-41,42

b. உதாரனம்: யோவான் 8:1-11

c. நீதி 16:13;

d. பார்க்கவும் நீதி 24:24,25

நமக்கான பாடம்:

1. தலைவனாய் இருப்பது என்பது பட்டமோ, பதவியோ இல்லை. அது பொறுப்பு இன்றைய நாட்களில் குடும்பத்திலும், சபையிலும் மற்றும் வேலை செய்கிற இடத்திலும், இந்த பொறுப்பில் தோற்று போவதற்கு காரணம் “வாக்கிலும், செயலிலும்” சரியாக இல்லாமல் இருப்பது.
2. இயேசு கிறிஸ்துவைப்போல செயலிலும், வார்த்தையிலும் நாம் சரியானவர்களாய் இருந்தால், நாமும் இயேசுவைப் போல நல்ல தலைவர்களாய் இருக்க முடியும்.
3. ஞாபம் வைத்துக்கொள்ளுங்கள் -

**b.** நீங்கள் நல்லது செய்கிறீர்களோ அல்லது கெட்டது செய்கிறீர்களோ, ஆனால் யாரோ ஒருவர் உங்களை பார்த்துக்கொண்டு இருக்கிறார், உங்கள் செயல்களினால் கவர்த்து அவர் நீங்கள் செய்வதைப்போல செய்கிறார்.